செ.வெ. எண்: 515 நாள்: 03.09.2012

<u>செய்தி வெளியீடு</u>

இரண்டாம் பசுமை புரட்சிக்கு வித்திடும் வகையிலும், உணவு தானிய உற்பத்தியில் உயரிய இலக்கை அடையும் வண்ணமும், நவீன தொழில் நுட்பங்களைக் கடைப்பிடித்து உற்பத்தித்திறனை அதிகரிக்கும் நடவடிக்கைகளையும், நெல், பயறு வகைகள், சிறு தானியங்கள் சாகுபடியில் அதிக மகசூல் பெறும் விவசாயிகளை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளையும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் எடுத்து வருகிறார்கள்.

அந்த வகையில், திருந்திய நெல் சாகுபடி தொழில் நுட்பத்தினை கடைப்பிடித்து, மாநிலத்திலேயே அதிக விளைச்சலைப் பெறும் விவசாயிக்கு, ஒவ்வொரு ஆண்டும் சிறப்புப் பரிசுத் தொகையாக 5 லட்சம் ரூபாயும், 3,500 ரூபாய் மதிப்புடைய பதக்கமும், குடியரசு தினத்தன்று வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஏற்கெனவே உத்தரவிட்டுள்ளார்கள்.

இதேபோன்று, நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்தி, மானாவாரி நெல், சிறு தானியங்கள் மற்றும் பயறு வகைகளில் உற்பத்தியை அதிகரிக்கும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் நெல்(மானாவாரி), சோளம் (மானாவாரி மற்றும் இறவை), கேழ்வரகு (மானாவாரி மற்றும் இறவை) சாமை (மானாவாரி), துவரை (மானாவாரி மற்றும் இறவை), பச்சைப் பயறு (மானாவாரி மற்றும் இறவை) மற்றும் உளுந்து (மானாவாரி மற்றும் இறவை) ஆகிய பயிர்களின் சாகுபடியில் அதிகமான மகசூல் பெறும் விவசாயிகளை தேர்வு செய்து, ஒவ்வொரு இனத்திற்கும் முதல் பரிசாக 50,000 ரூபாயும், இரண்டாம் பரிசாக 25,000 ரூபாயும், மூன்றாம் பரிசாக 10,000 ரூபாயும் வழங்கவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இவ்விருதுகள் வழங்குவதற்காக 11 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதன் மூலம் தமிழகத்தில் 36 விவசாயிகளுக்கு பரிசுத் தொகை வழங்கப்படும்.

இதன் மூலம் நவீன தொழில் நுட்பங்களை கடைப்பிடித்து நெல் (மானாவாரி), சிறு தானியங்கள் மற்றும் பயறு வகைகள் உற்பத்தித் திறனை அதிகரிக்க விவசாயிகளிடையே விழிப்புணர்வும், போட்டி மனப்பான்மையும் ஏற்பட்டு, உற்பத்தி அதிகரிக்க வழிவகை ஏற்படும். விவசாயிகள் மற்றும் பொது மக்களின் வாழ்வில் மலர்ச்சியும் ஏற்படும்.

*******

வெளியீடு:-இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9.
நாள் :-3.9.2012.